# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C.61/2025**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 31.07.2025.**

| | |
|---|---|
| **Name : சீனிவாசன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 2 present. ) (Accused 1 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து 04.08.2016 வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.09.2024-ம் தேதி கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் நான் நிலையப் பொறுப்பில் இருந்த போது, மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த சம்புவள்ளி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் நிலையம் வந்து சமுதாய பதிவேட்டில் பதியப்பெற்று மனு ரசீது எண்.262/2024 என்ற எண்ணில் பதியப்பெற்று பின் விசாரணை முடிவில் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்235/2024 u/Sec. 296(பி), 115(2), 118(1), 351(3), BNS** ஆக வழக்கு பதிவு செய்தேன். மனு ரசீது மற்றும் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7** மற்றும் **8** ஆகும்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி ஆகிய நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 07.10.2024 ம் தேதி மதியம் 2.30 மணிக்கு சம்பவ இடம் பருவம்தெருவில் உள்ள வாதி வீட்டு முன்பு சென்று சாட்சிகள் சங்கர் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். வரைபடம் **அ.சா.ஆ9** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் சம்புவள்ளி, பிரிபு, சுமதி, மணிகண்டன், சங்கர், செந்தில்குமார், மருத்துவர் அருண் நடேசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயமடைந்த சம்புவள்ளி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அருண் நடேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றேன். மருத்துவர் சம்புவள்ளி என்பவருக்கு இடதுகை நடுவிரலில் எலும்புமுறிவு ஏற்பட்டு கொடுங்காயம் ஏற்பட்டதாக கருத்துரை வழங்கினார். இவ்வழக்கில் கடந்த 07.10.2024 ம் தேதியன்று விறகு கட்டைகள் இரண்டு சம்பவயிடத்தில் வைத்து சங்கர் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.10** ஆகும். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 95 வாயிலாக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். படிவம் 95 **அ.சா.ஆ.11** ஆகும்.

5. இவ்வழக்கின் எதிரிகள் கடந்த 11.10.2024 ம் தேதி காவல் நிலையம் முன்பாக வைத்து கைது செய்யப்பட்டு நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார்கள்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 12.10.2024ம் தேதி **நி.கு.எண்235/2024 u/Sec. 296(பி), 115(2), 118(1), 351(3), BNS லிருந்து u/Sec. 296(பி), 115(2), 118(2), 351(3), BNS** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.12** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.**

7. புகார் வாக்குமூலம் நான் பதிவு செய்தேன் என்றால் ஆமாம். சம்பவ இடம் காவல் நிலையத்திலிருந்து 5 கி.மீ. வடக்கில் உள்ளது. முதல் தகவல் அறிக்கை 07.10.2024ம் தேதி காலதாமதாக பதியப்பெற்றது என்றால் மனு ரசீது வழங்கி விசாரித்ததால் காலதாமதம் இல்லை. மனு விசாரணையில் எதிரிகளை விசாரித்தேனா என்றால் ஆமாம். அவர்களும் புகார் கொடுத்தார்கள். 1ம் எதிரி சங்கீதா புகார் கொடுத்தார்களா என்றால் ஆமாம். அவர்கள் யார் யார் மீது புகார்

கொடுத்தார்கள் என்றால் பிரபு மற்றும் மற்றொரு நபர் என காணப்பட்டது. 1ம் எதிரி மருத்துவமனையில் இருந்ததார்களா என்றால் ஆமாம். அந்த புகார் மீது மனு ரசீது வழங்கினேனா என்றால் ஆமாம். அதன் எண் சொல்ல முடியுமா என்றால் 261 ஆகும்.

8) 1ம் எதிரி கொடுத்த புகாரில் யார் யாரை விசாரித்தேன் என்றால் சம்புவள்ளி, பிரபு, சுமதி, மணிகண்டன் ஆகியோரை விசாரித்தேன். 1 மற்றும் 2ம் எதிரி மற்றும் பக்கத்தில் உள்ளவர்களை விசாரித்தேனா என்றால் ஆமாம். வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் ஆமாம். 1ம் எதிரி தரப்பில் பதியப்பட்ட வாக்குமூலத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம்.

9) 1ம் எதிரி கொடுத்த புகாரின்பேரில் குற்ற எண்.236/2024 என்ற எண்ணில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையை பார்த்து தான் சொல்லமுடியும். அந்த வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த வழக்கை நான் தான் விசாரணை அதிகாரி என்றால் ஆமாம்.

10) அ.சா.1 அரசு மருத்துவமனைக்கு செல்லவேண்டியது என்றால் காவல் நிலையத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும் என்றால் ஆமாம். சம்பவம் நடந்த அன்று மருத்துவமனை செல்லும் முன்பாக அ.சா.1 எழுத்து மூலமாக காவல் நிலையம் வந்து புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். கடந்த 30.09.2024ம் தேதியன்று பிரபு என்பவர் தான் மருத்துவமனைக்கு அழைத்துவந்ததாக இல்லை என்றால் ஆமாம். அ.சா.1 க்கு 2 மகன்கள் மற்றும் ஒரு மகள் என சொல்லியுள்ளார் என்றால் ஆமாம்.

11) அ.சா.1 ன் மகள் சசிகலாவின் கணவர் காவல் துறை உதவி ஆய்வாளராக வேலை செய்கிறார் என்றால் ஆமாம். எந்த காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக வேலை செய்கிறார் என்றால் ஆத்தூர் காவல் நிலையத்தில் உள்ளார். அ.சா.1 ன் 2வது மகன் வீடு பத்தடி தூரத்தில் உள்ளது என்றால் ஆமாம். அந்த வீட்டில் சிசிடிவி கேமரா பதியப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கடந்த 30.09.2024ம் தேதியன்று சம்பவம் நடந்ததை சிசிடிவி பதிவில் உள்ளதா

என்றால் பார்வையிட்டதில் இல்லை. சம்பவம் எங்கு நடந்தது என்றால் சம்புவள்ளி குடியிருக்கும் வீட்டு வாசல் முன்பாக நடந்தது. அ.சா.1 1வது மற்றும் 2வது எதிரி குடியிருக்கும் வீட்டின் மேல்மாடியில் உள்ளார் என்றால் ஆமாம். 30.09.2024தேதிக்கு முன்பாக குடியிருக்க விடாமல் கழிவு நீரை ஊற்றுவதாக சொல்லி புகார் கொடுக்கப்பட்டு அதை சமரசமாக பேசி முடிக்கப்பட்டது என்றால் உறவு முறையை கருத்தில் கொண்டு முடிக்கப்பட்டது. 30.09.2024 தேதிக்கு முன்பாக அ.சா.2 பாலியல் ரீதியாக தொந்தரவு கொடுப்பதாக சொல்லி புகார் கொடுக்கப்பட்டது என்றால் நினைவில்லை.

12) அ.சா.1 மற்றும் 1ம் எதிரிக்கும் இடையே நிலம் சம்பந்தமாக வழக்கு நடந்து வருகிறது என்றால் ஆமாம். என்ன மரத்திலான கட்டை என தெரிந்து கொண்டேனா என்றால் அது என்ன வகையான மரம் என தெரியவில்லை. அகலம் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். கட்டையா, குச்சியா என்று அகலத்தை குறிப்பிடததால் அதனை பற்றி சொல்ல முடியாது என்றால் அது கட்டை தான்.

13) சம்பவம் இடம் குடியில்லாத நபர்கள் முன்பாக வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டது என்றால் ஆமாம். சம்பவத்தை மகஜர் சாட்சியில் பார்க்கவில்லை என்றால் ஆமாம். இந்த சான்று பொருளை பயன்படுத்திதான் அடித்ததாக சொல்லி அ.சா. 1 அடையாளம் காட்டினார் என்றால் ஆமாம். 07.10.2024ம் தேதியன்று எத்தனை மணிக்கு கைப்பற்றினேன் என்றால் மதியம் 12 மணிக்கு கைப்பற்றினேன். அன்யை தினம் அ.சா.1 மருத்துவமனையில் இருந்தார் என்றால் இல்லை.

14) விபத்து பதிவேட்டில் அ.சா.1 கட்டையால் அடித்ததாக மருத்துவரிடம் சொல்லவில்லை என்றால் ஆமாம். காயச்சான்று பெறும் முன்பாக எலும்பு முறிவு சிகிச்சை நிபுனரை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. அ.சா.1 விசாரிக்கும்போது நுண்கதிர் படம் எடுத்தாக வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். அ.சா.1 வாக்குமூலம் பெற்ற பிறகு எங்கு வைத்து

விசாரித்தேன் என்றால் வீட்டில் வைத்து விசாரித்தேன். வாக்குமூலம் பதியும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் மதியம் 1 மணி இருக்கும்.

15) அனைத்து வழக்கு ஆவணங்களையும் ஒரே நேரத்தில் செய்தேனா என்றால் இல்லை. பார்வை மகஜரில் அரசு ஆரம்ப பள்ளி உள்ளதை குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். அ.சா.2 மற்றும் 3 ஆகியோரிடையே எதிரிகளுக்கு பேச்சி வார்த்தை இல்லை என்றால் ஆமாம். நிலப்பிரச்சனை சம்பந்தமாக முன்விரோதம் இருந்ததாக சொல்லவில்லை என்றால் ஆமாம்.

16) சம்பவ யிடத்தில் முன்பாக உள்ள வீடுகளில் உள்ள நபர்களை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அ.சா.1க்கு நான் விசாரிக்கும்போது கையில் வீக்கம் இருந்ததா என்றால் ஆமாம். அ.சா.1க்கு எந்தவித எலும்பு முறிவு இல்லை என்றால் ஆமாம். மருத்துவர் எலும்பு முறிவு இல்லை என சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

17) அ.சா.1 மற்றும் 2 1வது எதிரியை அவர் குடியிருக்கும் வீட்டை காலி செய்ய வேண்டும் என்பதற்காகவும், பூர்விக சொத்து கிடைக்கவேண்டி பாகத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காகவும் அடிக்கடி தகாராறு செய்து வந்தார்கள் என்றால் இல்லை. அ.சா.2 பிரபு என்பவர் 1ம் எதிரியின் கணவர் இறந்து போனதால் அது சாதகமாக்கி கொண்டு 1வது எதிரிக்கு பாலியல் ரீதியாக துன்புறுத்தல் செய்து வந்தார் என்றால் அவ்வாறு இல்லை. இதுகுறித்து காவல் நிலையத்தில் பலமுறை புகார் கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். இது சம்பந்தமில்லாமல் பேசிமுடிக்கப்பட்டு சமாதானம் ஆனார்கள் என்றால் ஆமாம். சம்பவத்தன்று அ.சா.1 வீட்டில் இருந்து காலி செய்ய வேண்டி மேலேயிருந்த கீழே குப்பையை போட்டார் என்றால் இல்லை.

18) 1ம் எதிரி கேட்டபோது அ.சா.1 1வது எதிரியின் முகத்தில் குப்பைகளை கொட்டி அவரை அடித்து தாக்கினார் என்றால் இல்லை. இதுசம்பந்தமாக 1வது

எதிரி புகார் கொடுத்ததை தெரிந்துகொண்டு எதிரிகள் அ.சா.1 தாக்கியதாக பொய்யாக புகார் கொடுத்தார் என்றால் அவ்வாறு இல்லை. அ.சா.1 க்கு புகாரில் சொன்னமாதிரி எந்த காயமும் இல்லை என்றால் அவ்வாறு இல்லை. மருத்துவமனையில் சேர்ந்த பின்னிட்ட எதிரிகளை பழிவாங்க வேண்டி தன்னிச்சையாக காயம் விளைவித்து பொய்சாட்சி சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. உண்மையில் அ.சா.1க்கு காயம் ஏற்பட்டிருந்தாலோ, கட்டையால் அடித்திருந்தாலோ மருத்துவரிடம் இது குறித்து கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

19) நான் தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் இல்லை. நான் உண்மையாக சம்பவ இடம் சென்றிருந்தால் பத்தடி தூரத்தில் உள்ள அரசு பள்ளியை காட்டியிருப்பேன் என்றால் அவ்வாறு இல்லை. அ.சா.1 தான் 1ம் எதிரியை அடித்தார் என்றும், பழிவாங்க வேண்டி சிசிடிவி பதிவுகளை மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.